பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.லிட்.

மலர்: 15] சென்னை: ஐப்பசி 3௨ (20—10—67) வெள்ளி   வெளியூர்: ஐப்பசி 4௨ (21—10—67) சனி [இதழ்: 106

பருப்பு விலையை ஏன் குறைக்க இயலவில்லை?--

சர்க்கரை கிடைக்காமல் விலை கூடுவது ஏன்?--

வெல்லத் தடை விதிப்பதற்கு என்ன காரணம்?

'ஏதாவது ஒரு நன்மை ஏற்பட்டாக வேண்டும்'

டில்லியின் அலட்சியப் போக்கு- தமிழக அரசின் [illegible]டவடிக்கை

முதலமைச்சர் அண்[illegible] விளக்கம்

[illegible]னை, அக் 20--

" 'புதிய அரசு வந்திருக்கிறது; நம் குறைக[illegible]ல்லாம் அது தீர்க்காதா' என்று மக்களிடம் ஓர் எண்ணம் இருக்கிறது. காங்கிரசுக்காரர்களும், 'அரிசி விலையைக் குறைத்த ஆட்சியினர் பருப்பு விலையை ஏன் குறைக்கவில்லை?' எனக் கேட்கின்றனர்!

அரிசி விலையைக் குறைக்கும் ஆற்றல் இருந்து அதனை நாம் குறைத்திருக்கும்போது, நாம் ஏன் பருப்பு விலையைக் குறைத்திருக்கக்கூடாது? இதிலுள்ள இரகசியம்தான் என்ன?

நமது மாநிலத்துக்குத் தேவையான பருப்பு நமது நாட்டில் விளைவதில்லை. தமிழ்நாட்டில் இராமநாதபுரம் முதலிய சிற்சில இடங்களைத் தவிர வேறு இடங்களில் நாம் பருப்பை உற்பத்தி செய்ய முடியாது.

ஆனால், இந்தியா முழுவதுக்கும் தேவையான பருப்பு பாஞ்சாலத்திலும், உத்தரப் பிரதேசத்திலும், மத்தியப் பிரதேசத்திலும், அரியானாவிலும் விளைகிறது.

அங்கிருந்து கடந்த மூன்று மாதங்களாக நமக்கு வரவேண்டிய பருப்பு அளவு வெட்டப்பட்டுவிட்டது; அதனால் பருப்பு விலை ஏறியது. இது பற்றி நானும் உணவு அமைச்சரும் பல்முறை டெல்லியிடம் சொன்னோம்; உணவு அமைச்சர் ஒரு தடவைக்கு மூன்று தடவை கேட்டுவிட்டார்; இந்த மாதம்வரை எங்கள் கோரிக்கையை மத்திய அரசு கேட்கவில்லை.

அலங்கார பீடத்தில் அமருவதற்கா வந்தோம்?

தமிழகத்தில் பல இடங்களில் சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது; அதில் நமது தேவை போக மீதியை எடுத்துச் செல்லும்படிச் சொன்னால், அதற்கு டெல்லி தயாராக இல்லை!

'உங்களுக்கு எவ்வளவு சர்க்கரை தேவை?' என்று கேட்கிறது மத்திய அரசு; நாம் ஒரு இலட்சம் டன் கேட்டால், அவர்கள் நாற்பது ஆயிரம் டன் தர ஒப்புக்கொண்டு—எட்டாயிரம் டன் அனுப்புகிறார்கள்; பின், பத்து முறை கேட்டால் பத்தாயிரம் டன் வருகிறது! இதனால் விலை ஏறுகிறது!

இந்த உண்மையை முன்பு இருந்தவர்கள் மறைத்தார்கள்; நாங்கள் அதை மறைக்கமாட்டோம். அதை மக்களுக்கு எடுத்துக்கூறத்தான் ஆட்சிக்கு வந்தோமே தவிர, அலங்கார பீடத்தில் அமருவதற்காக வரவில்லை!

கேட்டுப் பார்த்தோம்--ஒப்பவில்லை!

இங்கு உற்பத்தியாகும் வெல்லத்தை வியாபாரிகள் மராட்டியத்திற்கு அனுப்புகிறார்கள்; அங்கு அது பீர், பிராந்தி மற்று[illegible] பானங்கள் தயாரிக்க அதிகம் தேவைப்ப[illegible] வெல்லம் விலை ஏறாமல் என்ன செய்யும்?

இதற்காக ஒரு மாதமாக வாதாடுகிறோம், ஒவ்வொ[illegible] கொடுக்கிறோம்! வெல்லம் வெளி மாநிலங்களுக்கு[illegible] நிறுத்த, தடை போடவேண்டும்' என்று நாம் சொன்[illegible] உணவு அமைச்சர் செகசிவன்ராம், 'ஐயோ! அவர்[illegible] படுவார்களே' என்று சமாதானம் கூறுகிறார்! ஆ[illegible] கள் பருப்பு அனுப்புவதை நிறுத்தியதை மட்டும் அ[illegible]க் கேட்கவில்லை-

இதற்கு டில்லியிடம் கேட்டுப்பார்த்தோம்—ஒத்துக்[illegible]ள்ள வில்லை; அதனால், இந்த முடிவு எடுத்தோம்; 'வெ[illegible] மாநி மாநிலங்களுக்கு நம் வெல்லம் போகாமல் தடுக்க மு[illegible]ப்படி தடைபோடுவது' என்று முடிவு செய்திருக்கிறோம்.

டில்லி என்னதான் செய்கிறது பார்க்கலாம்; இது எந்த வகையான குற்றமோ எனக்குத் தெரியாது; ஆனால், இதன் மூலம் இரண்டு நன்மைகள் ஏற்பட்டாக வேண்டும்.

ஒன்று—'வெல்லத்தைத் தடை செய்யாதே; பருப்பு தருகிறேன்' என்றுகூறி மத்திய அரசு, பருப்பு தரவேண்டும்; அல்லது 'உங்கள் மாநிலத்து வெல்லத்தை நீங்களே பயன்படுத்திக் கொள்ளுங்கள்'—என்று நாம் தடை போட்டதை—ஒப்புக் கொள்ளவேண்டும்."

ஆகவே, இந்த நிலையில் இன்று ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம்; 'இங்கிருந்து செல்லும் வெல்லத்தை தடுத்து நிறுத்தி மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும்' என்று நானும், உணவு அமைச்சரும் முடிவு செய்திருக்கிறோம்!

—திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியச் சார்பில் ஈக்காடு கிராமத்தில் நடைபெற்ற பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில்: 19—10—67

இவர் பெயர்தான் அண்ணா-- இதன் பெயர்தான் அரசியல்!

பொதுவாக எல்லாத் தேர்தல்களும், சாதாரண போக்கில்தான் நடைபெற வேண்டும்; அதற்காக, ஒரு பரபரப்பை ஏற்படுத்திவிடக் கூடாது; மக்கள் கவனத்தை முழுவதும், இது திருப்பிவிடக் கூடாது!

தேர்தலிலிருந்து பரபரப்பு நீக்கப்பட வேண்டும்!

பொதுமக்களைப் பின்னால் தள்ளிவிட்டு அரசியல்வாதிகள்தான் முன்னால் நிற்கிறார்கள்! பொதுமக்களுக்குத்தான் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்!

தேர்தல் விவகாரங்களில் சூடு தேவையில்லை; வீணான ஆரவாரங்கள், தேர்தலுக்குப் பின்னும் பல மாதங்கள் நீடித்து வேறு விளைவுகளைக் கொடுத்துவிடும்!

அரசியல் உணர்வுகள் கரடுமுரடானதாக அமையக் கூடாது!

அரசியலில் மென்மைப் போக்குதான் தேவை—அவசியம்!

இதில் அரசியல்வாதிகள் தேர்ச்சி பெறவில்லையென்றால், அரசியல், நல்லவர்கள் கரங்களைவிட்டுப் பொல்லாதவர்கள் கைகளில் போய்ச் சேர்ந்துவிடும்!

—19—10—67 அன்று சென்னையில் செய்தியாளர்களிடையே முதலமைச்சர் அண்ணா அவர்கள் தெரிவித்த கருத்துக்கள்.

மேலும் பேசுகிறார் சேத் கோவிந்த தாஸ்!

இப்போதைய இலக்கு ஜபல்பூர் பல்கலைக் கழகம்!

பாட மொழியாக இருக்கும் ஆங்கிலத்தை இந்த நடப்பு ஆண்டு முதல் முற்றிலும் நீக்கவில்லையென்றால், ஜபல்பூர் பல்கலைக் கழகத்தை எதிர்த்து 'கெரோ' செய்யப் போவதாக எச்சரிக்கை விடுத்துப் பேசியிருக்கிறார்—காங்கிரசுப் பாராளுமன்ற உறுப்பினரும் இந்தித் திணிப்பு வெறியருமான சேத்கோவிந்த தாஸ்!

இந்தியை எதிர்க்கும் தமிழகத்தை, இராணுவத்தை ஏவி அடக்குமாறு சில நாட்களுக்கு முன் இவர் பேசியிருப்பது குறிப்பிடத்தக்கது.

"நாட்டின் பெரும்பாலான பல்கலைக் கழகங்கள் ஆங்கிலத்தின் பளுவை இறக்கிவைத்திருக்கும்போது, ஜபல்பூர் பல்கலைக் கழகம் மட்டும், இன்னும் அந்த மொழியினை நீடித்துக் கொண்டிருப்பதைப் பொறுத்[illegible] [illegible]அருகில், [illegible]னவர் கூட்டமொ[illegible] அவர் கூறியுள்ளார்.

ஒளிமயமான எதிர்காலம்

தமிழகத் தொழிலமைச்சரின் திட்டம்

"1,06,500 ஏக்கர் நிலம் விவசாய உதவி பெறுவதற்கும், 2,618 கிராமங்கள் ஒளியினை அடைவதற்கும் உதவும் வகையில், 1967—68-ம் ஆண்டில் தமிழகத்தில் மின்சார வினியோகம் விரிவுபடுத்தப்படும்"

என்று தொழில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள். செய்தியாளர்களிடையே அறிவித்தார்.

"இந்தப் பணிக்காகத் தமிழக அரசு, ரூ. 10.62 கோடியை மத்திய அரசிடம் உதவியாகக் கோரியிருக்கிறது" என்றும் அவர் தெரிவித்தார்.

அமைச்சர் பேசக்கூடாது

எனப் போலீசார் தடையுத்தரவு!

டாடா இரும்பு எஃகு சுரங்கத்தைச் சார்ந்த 'ஜீட்பூர்' தொழிலாளர் கூட்டம் ஒன்றில் பேசுவதற்குச் சென்ற பீகார் உணவு அமைச்சர் கபீல் தியா சிங் என்பவருக்கு, ஜோரா போகர் போலீசு நிலைய அதிகாரி, 'பேசக் கூடாது' என்ற தடையுத்தரவை வழங்கியிருக்கிறார்.

உத்தரவை வாங்கிக்கொள்ள மறுத்த சிங், 'இந்தப் பூமியில் உள்ள எந்தச் சக்தியும்—நான் பீகாரின் அமைச்சராக உள்ள வரையில்—'பேசக் கூடாது' என என்னைக் கட்டுப்படுத்த முடியாது'' என்று கூறியிருக்கிறார்.

போலீசுத் தடைக்கான காரணத்தை, எந்தத் தகவல்களும் விளக்கவில்லை.

'சிரிக்கும்பத்திரிகை'க்கு வந்த சீற்றம்!

'ஆனந்த விகட'னுக்கும் வந்த ஆச்சரியம் பாரீர்!

★

"மத்திய அரசும் மாநில அரசுகளும் கூடிப்பேசி, ஆட்சி மொழிப் பிரச்சினையை சனநாயக வழியில் சமரசமாகத் தீர்க்க வேண்டும் என முயன்றுகொண்டிருக்கும் தற்போதைய சூழ்நிலையில், இப்படியொரு சனநாயக விரோதமான கருத்தைத் தெரிவித்துள்ள திரு. சேத் கோவிந்த தாசை வன்மையாகக் கண்டித்தே ஆகவேண்டும்.

"தங்கள் கட்சியை (காங்கிரசு)ச் சேர்ந்த ஓர் உறுப்பினர் இவ்வாறு பேசியதற்கு, மத்திய அமைச்சர்களும், மற்றையத் தலைவர்களும் கடுமையாகக் கண்டனக்குரல் எழுப்பாததை நினைத்தால், ஆச்சரியமாக இருக்கிறது!''

—[இந்தித் திணிப்பை எதிர்க்கும் சென்னை (தமிழகத்துக்கு)க்கு மத்திய அரசு இராணுவத்தை அனுப்பி அடக்க வேண்டும்' என்று, சேத் கோவிந்த தாஸ் பேசியதையொட்டி, 22—10—67 தேதியிட்ட 'ஆனந்த விகடன்' எழுதியுள்ள தலையங்கத்தின் இறுதிப் பகுதி.]

மதுரை எஸ். முத்து

நன்றியறிவிப்பு

"நான் கார் விபத்துக்குள்ளாகி மருத்துவமனையிலிருந்த நேரத்தில் நேரில் வந்தும், தந்தி—தபால் மூலமாகவும் ஆறுதல் கூறிய கழகத் தோழர்களுக்கும், நண்பர்களுக்கும் என் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்''

என்று மதுரை எஸ். முத்து எம்.எல்.சி. அறிவிக்கிறார்.

'சிவசேனை'க்கு முன்ஷி கண்டனம்

"நாட்டு ஒருமைப்பாட்டிற்கு சிவசேனை ஆபத்தானது; இதன் விளைவாக நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சங்கிலித் தொடர்போல், இதே போன்ற அமைப்புகள் தோன்றிவிடும்''

என்று, பெங்களூர் கூட்டம் ஒன்றில் பேசிய கே. எம். முன்ஷி கருத்தறிவித்தார்.

நம்நாடு
ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

திருவள்ளுவராண்டு 1998 ஐப்பசி 3 (20—10—67) வெள்ளி

காமராசரின் சவடால்!

[1]

தென் சென்னை இடைத் தேர்தலுக்கான பிரசாரம் சூடு பிடித்திருக்கிறது. இந்தச் சூடு, தேர்தல் நாள் நெருங்க நெருங்கப் பல மடங்கு கூடுதலாகும்.

தேர்தல் பிரசாரத்தில் பெருக்கெடுக்கும் சூடு, கழகத்தின் கொள்கைகளிலும் கழக அரசின் சாதனைகளிலும் தாம் ஏதாவது குறைபாடு கண்டால் அதைச் சுட்டிக்காட்டி, காங்கிரசு வேட்பாளருக்கு ஆதரவு திரட்டுவதாக அமைந்திருக்கப் பார்த்துக்கொள்ளுவதுதான் நாகரிகமான அரசியலாகும். இந்த நாகரிகமான முறையை ஒதுக்கித் தள்ளிவிட்டு, கழக அமைச்சர்களையும், மற்ற கழகத் தலைவர்களையும் தரக்குறைவாகத் தாக்கத் துணிவது விரும்பத்தக்கதல்ல என்பதுடன், நாகரிக அரசியல் வளர்ச்சியைக் குலைப்பதாகவும் முடிவுறும்.

கடந்த பல ஆண்டுக்காலமாக, இந்தி ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போரிட்டு வருவதில், நமது முன்னேற்றக் கழகம் முன்னணியில் இருந்துவந்திருக்கிறது என்பதை மறுப்பவர்கள் இருக்க முடியாது. இந்தித் திணிப்பை எதிர்த்து, வீர அறப்போர் பல புரிந்திருக்கிறது.

அவ்வறப்போரை அடக்கி ஒடுக்க—முன்னைய காங்கிரசு ஆட்சியினர் பலமுறை ஏவிவந்த கடுமையான அடக்குமுறைகளின் காரணமாக, கழகத்தவர் உயிரிழந்துள்ளனர்; கண்களை இழந்துள்ளனர்; கரங்களைப் பறிகொடுத்துள்ளனர்; இவ்வளவுக்கும் மேலாகச் சிலர், தங்களை, செந்தழலில் கருக்கிச் சாம்பலாக்கிக் கொண்டிருக்கின்றனர்!

இந்தித் திணிப்புக்கு எதிராக முன்னேற்றக் கழகம் பலி கொடுத்திருக்கின்ற உயிர்களும், இழந்துள்ள உடலுறுப்புக்களும், வெள்ளமெனப் பெருக்கெடுக்கத் தங்கள் உடலிலிருந்து சிந்திய இரத்தமும் வீண்போகவில்லை! இதன் விளைவாக, 'இந்தி வந்துவிட்டுப் போகட்டுமே' எனக் கவலையற்றிருந்தவர்களும், இந்தித் திணிப்புக்கு எதிராக முழக்கமிடலாயினர். சிறு காற்றுகத் துவங்கிய இந்தி எதிர்ப்பு, காலப்போக்கில், பயங்கரம் மிகுந்த சண்டமாருதமாக உருவெடுத்துவிட்டது!

இந்தித் திணிப்புக்குக் கிளம்பிய எதிர்ப்பு பலமடங்கு வல்வடைந்துவிட்டதைக் கண்ட அன்றையத் தலைமை அமைச்சர், 'எவர்மீதும் இந்தித் திணிப்பு இருக்கவே இருக்காது; இந்தி பேசாத பகுதி மக்கள் விரும்புகின்றவரை, ஆங்கில மொழியும் ஆட்சிமொழியாக இருந்துவரும்; அதற்கான சட்டம் இயற்றப்படும்' என வாக்களித்துத் தீரவேண்டிய கட்டாயத்துக்கு உள்ளானார். அவர் மறைவுக்குப் பின்னர் அப்பதவியை ஏற்றுக்கொண்ட லால்பகதூர் சாஸ்திரியார் அவர்களும், அந்த வாக்குறுதிக்கு உரமூட்டினார். இதே வாக்குறுதியை, இன்றுள்ள தலைமை அமைச்சரும் திரும்பத் திரும்ப நினைவுபடுத்திக் கொண்டே உள்ளார்.

ஆனால், இன்றுவரையில் சட்டமியற்றப்படவில்லை. 'அப்படியே சட்டமியற்றப்பட்டாலும், இந்தி பேசாத பகுதி மக்கள்மீது இந்தி மொழி திணிக்கப்படுவதை, அந்தச் சட்டத்தால் தடுத்து நிறுத்த முடியாது' என்ற உண்மையைக் கண்ட கழகம், 'நேரு தந்துள்ள வாக்குறுதியை உள்ளடக்கி அரசியல் சட்டத்திலேயே திருத்தம் செய்யவேண்டும்' என்ற கோரிக்கையை முழு மூச்சாக வற்புறுத்தி வருகிறது.

நேரு வாக்குறுதியைக் கொண்ட சாதாரணச் சட்டத்தை இயற்றுவதிலும் அக்கறை காட்டாமல், 'அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில் சட்டமியற்றப்படும்; அதற்கடுத்த கூட்டத்தில் நிச்சயமாகச் சட்டமியற்றப்பட்டுவிடும்' என்ற கதையை, தலைமை அமைச்சர் முதற்கொண்டு அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் காமராசர் வரையில், திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டு காலங்கழித்து வருகின்றனர்.

இதே சூழ்நிலையில், இந்தி ஏகாதிபத்திய வெறி தலைக்கேறியுள்ள நாடாளுமன்ற உறுப்பினரான சேத கோவிந்த தாஸ், 'தென்னக மக்கள்மீது படையை ஏவி இந்தியைத் திணிப்போம்' எனக் கொக்கரித்து வருகின்றார்.

சேத் கோவிந்த தாஸ் அவர்களின் இக்கொக்கரிப்பை, 'இந்தி திணிக்கப்படக் கூடாது' என்பதில் உண்மையான நல்லெண்ணமும் கவலையும் உடையவராக இருந்தால்—'அனைத்திந்திய காங்கிரசுத் தலைவர்' என்ற முறையில்—காமராசர் கண்டித்திருக்க வேண்டும். இப்படிக் கண்டிக்கத் துணிவில்லை என்றாலும், அந்த இந்தி வெறியரின் கூற்றுக்குக் காமராசர், வெளிப்படையாக மறுப்பாவது கூறியிருக்க வேண்டும்.

ஆனால் காமராசரோ, சேத் கோவிந்த தாஸ் வெறித்தனத்தைக் குறித்து, வாயை இறுக மூடிக்கொண்டிருக்கின்றார்! இப்பட[illegible] இந்தி திணிக்கப்பட்டால் என்ன—தமிழக மக்களின் எதிர்கால[illegible] நலன் அழிந்து போனால் என்ன—என்று துளியும் கவலை கொள்ளாமல், தென் சென்னை இடைத் தேர்தலில் காங்கிரசு வேட்பாளருக்கு ஆதரவு தேடும் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபாடு கொண்டிருக்கின்றார்.

தமது கட்சி வேட்பாளருக்காக, வாக்காளர்களிடம் ஆதரவு கோரி பேசவேண்டிய கடமை—'அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர்' என்ற முறையில்—காமராசருக்கு இருக்கத்தான் இருக்கிறது; அக்கடமையில் நாம் குறை காண்பதற்கு எதுவுமில்லை.

ஆனால், காங்கிரசு வேட்பாளரை ஆதரித்துத் தாம் பேசிய கூட்டமொன்றில், 'அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில், நேரு வாக்குறுதியை உள்ளடக்கமாகக் கொண்டு சட்டமியற்றப்படும்' என்ற கட்டுக் கதையை, வெட்கப்படாமலும், 'வாக்காளர்கள் நம்புவார்களா' என்பதைக் குறித்துக் கவலைகொள்ளாமலும் கட்டவிழ்த்துள்ளார்.

இந்தக் கட்டுக்கதையைக் கட்டவிழ்த்துவிட்டதுடனும் காமராசர் இருந்துவிடவில்லை. தாம் அவிழ்த்துவிட்ட கட்டுக்கதையை மக்கள் நம்பமாட்டார்கள் என்ற எண்ணம், அவருடைய மூளையைக் குடைந்திருக்கிறது. தமது கட்டுக்கதையை மக்கள் நம்பச் செய்வதற்காக, 'அடுத்த நாடாளுமன்றக் கூட்டத்தில் நேரு வாக்குறுதியை உள்ளடக்கிய சட்டம் நிறைவேற்றப்படாமல் போகும் பட்சத்தில்—இந்த இடைத்தேர்தலில் தப்பித்தவறி காங்கிரசு வேட்பாளர் வெற்றி பெற்றுவிடுவாரானால்—அந்த நாடாளுமன்ற உறுப்பினர் [illegible]யை உதறித் தள்ளிவிடுவார்' என்ற -- அறவே நம்பத் தகா[illegible]விட்டிருக்கின்[illegible]!

[illegible] வெற்றிபெறப் [illegible] [illegible]லைவர்கள் தெரிந் [illegible]—காமராசர் தி[illegible] தெரிந்துகொண்டிருக்கின்றார்!

இடைத்தேர்தலில் வாக்காள[illegible]க்கி வாக்குறுதிகளைப் பறிக்க—இந்த வாக்குறுதியைக் கொ[illegible]ன்வந்த இந்த 'அனைத்திந்தியப் பெரியவர்', நேரு வாக்குறு[illegible] [illegible]றைவேற்றி வைக்கத்தக்க சட்டத்தை இயற்றாமல், மத்திய [illegible]ங்கிரசு அரசு காலங்கழித்து வந்திருப்பதற்குரிய சமாதானத்[illegible] கூறவேண்டுமல்லவா? இதுவரையில் அத்தகைய சமாதான[illegible]தை, காமராசர் கூறியதுண்டா? 'கூற வேண்டும்' என நினை[illegible]தாவது பார்த்ததுண்டா?

அடுத்த நாடாளுமன்றக் கூட்ட[illegible]லும்—காமராசர் ஆசை காட்டுவதுபோல்—மொழிச் சட்டத்[illegible]க் கொண்டுவரப்போவதில்லை. இதை உறுதிப்படுத்தக்கூடிய சான்றுகள் ஏராளமாக உள்ளன!

—கா. க.

இந்தி மொழி ஆதிக்கத்தை எதிர்க்க டில்லியில் 'களம்'!

மாறனின் வெற்றி இன்றியமையாதது

"டில்லியில் செய்யவேண்டியதும், பேசவேண்டியதும் நிறைய உண்டு. தமிழகச் சட்டமன்றத்திலே எடுத்துரைக்கப்படுவதை விட—சாதிக்கக்கூடிய சாதனைகளைவிட—டில்லியில் அதிக முக்கியத்துவமுள்ள பணிகளைச் செய்யவேண்டியுள்ளது.

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துக் கட்டுப்படுத்துவதற்கு நமது தோழர்கள் விழிப்போடும் எழுச்சியோடும் அமர்ந்திருக்க வேண்டும்.

மொழிக்கு—அரசியலுக்கு—பொருளாதாரத்துக்குக் கேடு வராது பாதுகாப்பதற்கும், மேலும் பெற வேண்டியதற்கும், டில்லியில் களம் இருக்கவேண்டும்! ஆகையினால், கழகம், இந்த இடைத் தேர்தலில் வெற்றி பெறுவது அவசியம்!

'இராஜினமா செய்கிறாயா' என்று காமராசர் கேட்டதும், காங்கிரசு வேட்பாளர் புன்சிரிப்புச் சிரித்தார்—என்று சொன்னார்கள்; அந்தப் புன்சிரிப்புக்கு எனக்குப் பொருள் தெரிகிறது; 'இத்தனைக் கஷ்டப்பட்டு ஜெயிப்பது இராஜினமா செய்யவா? அதற்கா இந்த இராமசாமி பணம் செலவிடுவது" என்பதுதான் அந்தப் புன்சிரிப்பின் பொருளாக இருக்கக்கூடும்!

இராமசாமி ராஜினமா—என்றதும், இந்திரா அப்படியே அதைக் கண்டு நடுக்கமுறுவது போல அல்லவா காமராசர் சொல்லியிருக்கிறார்!

தமது காங்கிரசுத் தலைவர் பதவியை இராஜினமா செய்வதாகக் காமராசர் தெரிவித்தால் இந்திரா யோசிப்பார்; மற்ற மாநிலங்களிலும் கேட்பார்கள்; உலக நாடுகளின் கவனமும் ஈர்க்கப்படும்.

அதைவிட்டு, 'இராமசாமி இராஜினமா செய்வார்' என்கிறாரே—அப்படி இராஜினமா என்ன புதிதா? சுப்பிரமணியமும், அழகேசனும் செய்யவில்லையா? திருமணத்தில், 'மாப்பிள்ளை காசி யாத்திரை போவது' என்பார்கள்; அதுபோல், போய்விட்டுத் திரும்பினார்களே!

அவர்களது இராஜினமா செய்தி 'டெலிபிரிண்ட'ரில் வந்தவுடன்—அப்போது மணி இரவு 11 இருக்கும்—நான்தான் முதலில் தொலைபேசியில் அவர்களைப் பாராட்டினேன்; சி. சுப்பிரமணியத்தோடு பேசினேன்; அவர், 'ஆமாம்; கஷ்டமாக இருந்தது; செய்துவிட்டேன்; சாஸ்திரியிடமும் சொல்லிவிட்டேன்' என்றார்.

அழகேசனுடன் பேசியபோது, 'ஆமாம்; இராஜினமா செய்துவிட்டேன்' என்று அவர் சொன்னவிதம், ஒரு மாதிரியாகத்தானிருந்தது!

என்னிடம் அப்போதுவந்த நிருபர்கள் செய்தி வாங்கிவிட்டார்கள்; என்னிடம் வாங்கியதை இராஜாஜியிடம் போய்ச் சொல்லிக் கேட்டார்கள்; இராஜாஜி என்னைவிட அனுபவம் வாய்ந்தவரல்லவா?—'கொஞ்சம் பொறுங்கள்' என்று இராஜாஜி சொல்லிவிட்டார்; 'அண்ணாதுரையிடம் செய்தி வாங்கிவிட்டோம்' என்றார்கள்; 'அது ஒன்று மட்டும் இன்றைக்குப் போதும்; 2, 3 நாட்கள் பொறுங்கள்' என்று சொல்லி அனுப்பிவிட்டார் இராஜாஜி!

அவர்களும் 2, 3 நாட்களில் இராஜினமாவைத் திருப்பி வாங்கிக்கொண்டுபோய் அமர்ந்துவிட்டார்கள்!

அப்போதே நேருவின் உறுதிமொழியைச் சட்டமாக்குமாறு அவர்கள் சொல்லியிருந்தால், இந்திய அரசியலில் பெரிய திருப்பம் ஏற்பட்டிருக்கும்! 1967 தேர்தலில் அவர்களுக்குப் போட்டியில்லாமலே போயிருக்கும்! சுப்பிரமணியத்தை அப்படி அனுப்பவேண்டுமென்றெல்லாம் நான் நினைத்திருந்தேன்! அதெல்லாம் இராமலிங்க அடிகளார் சொன்னதுபோல்—பழங்கதையாய்—கனவாய் தொலைந்து போயிற்று!

'இராமசாமி! இராஜினமா செய்வாயா?' என்பதும், அதற்கு அவர் புன்சிரிப்புக் காட்டுவதும் மட்டும் போதுமா? இந்தி போய்விடுமா?

ஏ, அப்பா! இந்தி என்ன—அத்தனைச் சாதாரணமானதா? எத்தனை உயிர்களைக் குடித்திருக்கிறது? இன்னும் எத்தனை உயிர்களைக் குடிக்க இருக்கிறது?

எனவே, இந்திக்கு எதிராக நாம் வலிவுடன் இருந்தாக வேண்டும்.

இங்கேயும் அங்கேயும் (டில்லியிலும்) இருபுறத் தாக்குதல் போல—பாக்கு வெட்டிபோல்—இருந்தாக வேண்டும்!

நவம்பர் 7-ல் நீங்கள், தம்பி மாறனுக்கு வாக்கு அளித்திடுவதன் மூலம் நீங்கள் பெற்ற வெற்றியினை—உறுதியை மேலும் உறுதிப்படுத்திக் கொள்வதாக இருக்கும்."

—அறிஞர் அண்ணா

(திருவல்லிக்கேணி கூட்டத்தில்)

பதட்டமும் பணமும் அவர்கள் பக்கம்!

அமைதியும் ஆர்வமும் நமது பக்கம் இருக்கட்டு[illegible]

"இந்த இடைத் தேர்தலால் கிடைத்த இலாபம்—[illegible]ள் செய்த சாதனைகளைப் பற்றி நாங்கள் எடுத்துக்கூறவு[illegible] காங்கிரசுக்காரர்கள் எங்கள் ஆட்சியில் ஏதாவது [illegible]இருந்தால் எடுத்துக்கூறவுமான வாய்ப்புக் கிடைத்திரு[illegible]து என்பதாகும்.

"இரவு காலத்தில் காங்கிரசுக்காரர்கள் ஆதரவு திரட்டப் புறப்படுவதாக நண்பர்கள் இங்கே கூறினார்கள்; அது எவ்வளவுதூரம் உண்மை என்று எனக்குத் தெரியாது; ஆனால், இதிலிருந்து ஒன்று தெரிகிறது—20 ஆண்டுக் காலமாக அவர்கள் நாட்டை ஆண்ட முறை—அலங்கோலம் காரணமாகப் பகலில் வர அச்சப்படுகிறார்கள்! ஆனால் நாம், பகலிலேயும் இரவிலேயும் பிரிந்து பணியாற்ற வேண்டும்!

"இந்த இடைத் தேர்தலில் காங்கிரசுக்காரர்கள், தங்கள் பலத்தையெல்லாம், உருட்டித் திரட்டிக் காட்டவிருக்கிறார்கள்; காரணம், நடைபெற்ற பொதுத்தேர்தலில் தோற்றதனால்—இழந்துவிட்டதை எண்ணி—எரிச்சலும் ஏமாற்றமும், ஆத்திரமும் அடைந்திருக்கிறார்கள்!

"தேர்தலில் தங்கள் பணத்தையெல்லாம் இழந்துவிட்டவர்கள் இந்த இடைத் தேர்தலில் மிச்சமிருக்கும் பணத்தையெல்லாம் செலவழிக்க நினைக்கிறார்கள்!

"இருந்ததை இழந்ததால், இந்த இடைத்தேர்தலில் காங்கிரசுக்காரர்களிடம் ஆத்திரம்—பரபரப்பு—பதட்டம் இருக்கும்; ஆனால், நாம் அமைதியாக—அதே நேரத்தில் ஆர்வத்தை குறைத்துக்கொள்ளாமல்—அமைதி கெடாமல்—கொள்கைப் பற்றுடன்—அதே நேரத்தில் பரபரப்பு அடையாமல்—ஒருவர் வாக்குக்கூடத் தவறிப்போகாமல்—மாற்றாரையும் அணுகி, இனிய முறையில் ஓட்டுக் கேட்கவேண்டும்!"

—அறிஞர் அண்ணா

(தேனாம்பேட்டை கூட்டத்தில்)

மற்ற அரசியல்வாதிகளைப் போன்றில்லை அறிஞர் அண்ணா

மாணவர்களைக் கிளர்ச்சிக்குப் பயன்படுத்த அவர் விரும்பவில்லை

இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் மாணவர்கள் பல்வேறு கிளர்ச்சிகளில் ஈடுபட்டிருப்பதையும், அவர்களை அரசியல்வாதிகள் பயன்படுத்திக்கொள்வதையும், அதே நேரத்தில் தமிழகத்தில் மட்டும் மாணவர்களைப் போராட்டத்துக்கு ஊக்குவிக்காமல் இருந்து வரும் முதலமைச்சர் அண்ணா அவர்களின் சிறந்த பண்பைப் பாராட்டியும் ஏ.ஏ.என்.எஸ். செய்தி நிறுவனச் சார்பில் சி. சி. ஜோசப் என்பார் எழுதியுள்ள கட்டுரை வருமாறு :-

கல்லூரி மாணவர்கள் அண்மையில் ஒரே வாரத்தில் மட்டும் டில்லி, கல்கத்தா, ஐதராபாத், நாகபுரி, புவனேசுவரம், இந்தூர், பாலசோர், பதரக், விசாகப்பட்டினம் என்று நாட்டின் பல்வேறு பகுதிகளில் வன்மையான கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். அவர்களது கிளர்ச்சிக்கான காரணங்களும் பல்வேறுபட்டவையாக இருந்தன.

ஐதராபாதில் உஸ்மானியா பல்கலைக் கழகத் துணைவேந்தரின் கொடும்பாவிக்கும், ஆந்திரத் தகவல்—தொழில் துறை அமைச்சரின் கொடும்பாவிக்கும் தீயிட்டனர் கடைகளின் மீது கல்வீசினர்; கார்களைத் தாக்கினர்; தமக்குச் சம்பளச் சலுகை வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் இவ்வாறு வெளிப்படுத்தினர்.

கம்யூனிஸ்டு ஆட்சி நடக்கும் தென் மாநிலமான கேரளத்தில் நடந்த கிளர்ச்சியின்போது, தமது கல்லூரிக்கு அருகே அரசுப் போக்குவரத்து பஸ்களைத் திருப்பி விட வேண்டுமென்று, மாணவர் போலீசாருடன்மோதினர். அரசின் உணவுக் ,கொள்கைக்கு எதிர்ப்பைத் தெரிவிப்பதற்காக இதர மாணவர்கள் அமைச்சரின் காரை நிறுத்தினர். உள்ளூர்க் குறை ஒன்றுக்காக மற்றொரு கேரள அமைச்சரும் மடக்கப்பட்டார்.

மத்தியப் பிரதேசத்தில் தலைநகரான போபாலிலுள்ள மௌலானா ஆசாத் தொழில் நுட்பக் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள், கல்லூரி முதல்வரின் வீட்டிற்குப் படையெடுத்துச் சென்று, உணவுக் கட்டணம் உயர்ந்து வருவது பற்றியும், விடுதி நிர்வாகம் மோசமாயிருப்பது குறித்தும் தமது சங்கடத்தைத் தெரிவிப்பதற்காக ஒரு காருக்குத் தீவைத்தனர்.

இராஜஸ்தானத்திலுள்ள கோட்டாவைச் சேர்ந்த மாணவர்கள் வன்செயலில் இறங்கினர்; 'தேர்வில் தேறுவதற்காகக் குறைந்த பட்ச மதிப்பெண்களை மேலும் குறைக்க வேண்டும்; அவ்வாறு செய்தால் மேலும் பல மாணவர்கள் தேறிவிடுவர்' என்று அவர்கள் வன்செயலைக் கடைபிடித்தனர். அப்பகுதியில் கூட்டம் கூடுவதற்குத் தடை விதிக்க வேண்டிய தலைமை மாணவர் ஏற்படுத்தினர்.

கல்கத்தாவில் பல்கலைக் கழகச் செனட் கூட்டம் நடந்தபோது, கோஷங்கள் முழக்கமிட்ட மாணவர் கும்பல் ஒலிபெருக்கியைக் கைப்பற்றப் போராடியது. கல்கத்தாப் பல்கலைக் கழகத்தில் பல்வேறு உட்காரணங்களுக்காக பல மாதங்களாகக் குழப்பம் இருந்து வருகிறது.

வட இந்தியப் பல்கலைக் கழகங்கள் பலவற்றைச் சேர்ந்த மாணவர்கள், தேர்வுகளின் தரம் தளர்த்தப்பட வேண்டுமென்று விரும்புகின்றனர். இதற்காகப் பெரிய கிளர்ச்சிகள், நடந்திருக்கின்றன; தேர்வு மண்டபங்களில் நடக்கும் கள்ளத்தனங்களைத் தடுக்க முயன்ற ஆசிரியர்கள் நையப் புடைக்கப்பட்டிருக்கின்றனர்.

புகழ்பெற்ற அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத்தையும், பிற கல்விக்கூடங்களையும் சேர்ந்த மாணவர்கள் இரயிலில் டிக்கெட்டின்றிப் பயணம் செய்ததற்காக மாணவர்களுக்கு—இரயில்வே அதிகாரிகளுக்குமிடையே கைகலப்பு நடந்திருக்கிறது. 'இரயில்கள் தாமதமாக ஓடுகின்றன' என்று மாணவர்கள், சரியான முறையில் எதிர்ப்புக் தெரிவித்திருக்கின்றனர்; மாணவர்கள் எறிந்த கற்களினால் பெட்டிகளின் கண்ணாடி தூள் தூளாகியிருக்கிறது!

கண்ணன் பிறந்ததாகச் சொல்லப்படும் இடத்திற்கு அருகிலிருக்கும் மதுராவில், மாணவர்கள் ஆங்கிலம் கற்பிப்பதற்கு எதிராக நடத்திய கிளர்ச்சியின்போது, போலீசார் பிரம்பால் அடிக்க வேண்டி வந்தது. கிளர்ச்சிக்காரர்கள் தெரு விளக்குகளை உடைத்தனர்; ஆங்கிலத்தில் எழுதப்பெற்ற பெயர்ப் பலகைகளை நாசமாக்கினர்.

இந்தி பேசும் மாநிலமான உத்த[illegible] பிரதேசத்திலும், அதற்கு [illegible]யிலுள்ள இராஜஸ்தான[illegible] ஆங்கிலம் தொடர்ந்து நீடி[illegible] எதிர்த்து மாணவர்கள் கிளர்[illegible] செய்துவருகின்றனர்.

இரு[illegible] தெற்கிலுள்ள தமிழக மாண[illegible] இதற்கு முற்றிலும் நேர் எ[illegible] காரணங்களுக்காகக் கிளர்[illegible] செய்துவருகின்றனர். அங்கு 'இந்தித் திணிப்பை' எதிர்த்துக் கிளர்ச்சி நடக்கிறது; அங்கு பரவலாகத் தேசிய மொழிக்கு எதிர்ப்பு உள்ளது.

மாணவர் கிளர்ச்சிக்குப் பல காரணங்கள் உள்ளன. ஆனால் அவை, கல்வியைச் சார்ந்தவையாக இருப்பது அரிதாக இருக்கிறது; இது, அவற்றில் காணப்படும் துலக்கமான அம்சமாகும். கிளர்ச்சியின் நோக்கம் எதுவாயிருப்பினும் அது வன்செயலில் வந்து முடிகிறது; பொது அல்லது பல்கலைக் கழகச் சொத்துக்கள் தாக்கப்படுகின்றன.

மாணவர்களிடையே — குறிப்பாகக் கல்லூரிகளில் பயிலும் பத்து இலட்சத்துக்கு மேற்பட்ட மாணவர்களிடையே ஒழுங்கின்மை வலுத்துவிட்டதால், அது தேசிய விவாதத்திற்குரிய பொருளாகிவிட்டது.

இதற்குப் பின்னர், இளமைத் துடிப்பைக் காட்டிலும் மேம்பட்ட ஒன்று இருக்கிறது என்பது பொதுவாக ஏற்கப்பட்டுள்ளது; அது என்னவென்பது விவாதத்திற்குரியதாக இருப்பினும், பொதுவாக மேற்சொன்னவாறுதான் கருதப்படுகிறது.

"மாணவரைச் சுற்றி நிகழ்ந்து வரும் வேகமான சமூக—பொருளாதார மாற்றங்களினால் ஏற்படும் மன நெருக்கடியினாலும், ஏமாற்றத்தினாலும் அவர்களின் போக்கு இவ்வாறாகி இருக்கிறது" என்று மாணவர்மீது அனுதாபம் காட்டுவோர் கூறிவருகின்றனர். சான்றாக, மாணவரின் அதிருப்திக்கு முக்கியமான காரணங்களில் ஒன்று, படித்தவர்களிடையே பேரளவிற்கு வேலையில்லாத் திண்டாட்டம் இருப்பதாகும்; பட்டம் பெற்ற பிறகு வேலை கிடைக்குமா அல்லவா என்ற [illegible]யின்மை மாணவர் [illegible] டிருக்கிறத[illegible]

பெற்றோரி[illegible] ற தல், கல்வி பே[illegible] தல்; பொதுப்படையா[illegible] ருளாதாரத் துன்பங்கள் [illegible] இதர காரணங்களாகும்.

இதில் எது உ[illegible] யினும், மொத்தத்தில் ப[illegible] வாடையே ஒரு குறிக்கோள் [illegible]லையென்று தோன்றுகிறது; இ[illegible] நிலையை இலட்சிய வெறி கொ[illegible]ண்ட மாணவர் தலைவர்களும், [illegible] நெறிமுறை கடந்த அரசியல்வா[illegible]ளும் தமக்குச் சாதகமாகப் [illegible]ன்படுத்திக் கொள்ளலாம்.

புதுடில்லியில் அண்மையில் நடந்த பல்கலைக் கழக மாணவர் சங்கங்களின் மாநாட்டில்,

தமிழ்நாடு அணைக்கட்டுத் தொழிலாளர் முன்னேற்றசங்கம்

13—8—67 அன்று உடுமலை என். கன்னியப்பன் தலைமையில், தமிழ்நாடு அணைக்கட்டுத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது; கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர் :—

தலைவர் : ஏ.எஸ். மணி; துணைத் தலைவர் : ஏ. சுப்பிரமணியம்; செயலாளர் : மா. சேரன்; துணைச்செயலாளர் : பி. அழகுமுத்து; பொருளாளர் : வேலுசாமி; செயற்குழு உறுப்பினர்கள் : என். ஈ. தாமஸ், என். முத்துசாமி, பி. ஜெயராஜ், என். அப்துல் காதர், ஜி. கிருட்டினன், பி. பெரியசாமி.

(5-ம் பத்தி தொடர்ச்சி)

கூடிய ஆற்றலைப் பெறுதவர்கள்; விவசாயம் குன்றிப்போகிறது!

ஆகையால் கட்டுடல் கொண்ட இளைஞர்கள் கிராமத்திற்குத் திரும்பி, விவசாயத் தொழிலில்—'விஞ்ஞான முறையில் நம் நிலம்! நமக்குச் சொந்தமான நிலம்; நாம் படித்திருந்தாலும், நம் நிலத்தில் பயிரிடலாம்; உணவு உற்பத்தியைப் பெருக்கலாம்' என்ற நம்பிக்கையுடன் பாடுபட்டால், உணவு நெருக்கடியை நிச்சயமாகத் தீர்க்க முடியும்! கிராமம் ஒளிபெற முடியும்! இதற்கான வேலைகளை தமிழக அரசு விரைந்து செய்துவருகிறது!"

கண்காணிப்பு பொறியாளர் ஜி. கோவிந்தசாமி நன்றி நவின்றார்.

ஊராட்சி வரவேற்பு

பின்னர் அறிஞர் அண்ணா அவர்கள் தாம்போதி வழியாகக் காரில் அக்கரையில் அமைந்த திருமுக்கூடலுக்குச் சென்றார்; அங்கு ஊராட்சி மன்றத்தின் சார்பில் அண்ணா அவர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிட்டிபாபுவுக்கும் ஒரு வரவேற்பு அளிக்கப்பட்டது.

உணர்ச்சிப் பெருக்கிற்கே பெரிதும் இடம் கொடுத்துப் பல விஷயங்கள் பேசப்பட்டன.

பலர் குறுகியநோக்கங்கொண்ட விஷயங்களையும், மொழி விஷயம் பற்றியும் சொல்நயத்துடன் அள்ளி வீசினர். ஆனால் இன்று நாட்டில் தலைதூக்கி ஒற்றுமையை அச்சுறுத்தி நிற்கும் வகுப்புவாத, வட்டாரவாதப் போக்குகளின் ஆபத்துகளைக் குறித்துச் சிறிதளவே பேசப்பட்டது.

ஒழுக்கம் குன்றிவரும் நாட்டிற்கு அறவழியைக் காட்டச் சிறிதளவே முயலப்பட்டது. ஆனால் அம்மாநாட்டில் பொருத்தமான விஷயம் ஒன்று கூறப்பட்டது; 'அரசியல்வாதிகளைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர்களாக்கக் கூடாது' என்பதே அதுவாகும்.

அரசு பல்கலைக் கழகத்தின் உயர் பதவிக்குக் கல்வித்துறை சார்ந்தோரை விடுத்துச் கருத்து வேறுபாட்டிற்கான அரசியல் வாதிகளை நியமிப்பது மாணவர் கிளர்ச்சிக்கு ஓரளவு காரணம் என்பதில் ஐயமில்லை.

இது ஒருபுறமிருக்க, அரசியலை வைத்துச் சாதகம் பெறுவது மற்றொரு ஆழ்ந்த பிரச்சினையாயிருக்கிறது. கேரள ஆட்சியிலுள்ள இடதுசாரிக் கூட்டணியினர், மத்திய அரசின் உணவுக் கொள்கைக்கு எதிராகத் தெரிவிக்க விருந்த கண்[illegible], மாநில மெங்[illegible] [illegible]ணவர்கள் [illegible] டுமென்று [illegible] இதற்கு உதார[illegible]

எதிர்க்கட்சிகளும் சும்மா[illegible] வில்லை; அவை மாநில அரசின் உணவுக் கொள்கையை எதிர்த்து நடத்திய கிளர்ச்சிக்கு மாணவரின் ஒத்துழைப்பைக் கேட்டன.

இப்போக்கில் குறிப்பிடத்தக்க விதிவிலக்காக இருப்பவர், தமிழக முதலமைச்சரான சி. என். அண்ணாதுரை ஆவார். அவரது அரசு, இந்தித் திணிப்பை வலுவாக எதிர்த்தபோதிலும், மாணவர்கள் மொழிக்காகப் போராடுவதை அவர் ஊக்குவிக்கவில்லை.

கிராமங்களை முன்னேற்ற தமிழக அரசு காட்டும் அக்கறை!

முதலமைச்சர் அண்ணா விளக்கம்

"பாதையில்லாத கிராமம் இல்லை; பள்ளி இல்லாத கிராமம் இல்லை; மருத்துவமனை இல்லாத கிராமம் இல்லை; போக்குவரத்து வசதி இல்லாத கிராமம் இல்லை; படிப்பகம் இல்லாத கிராமம் இல்லை—என்ற நிலைமையை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன், அத்திசையை நோக்கி தமிழக அரசு வேகமாக நடைபோடத் துவங்கியிருக்கிறது; இது நடைபெற்றால், பின்னர் கிராம மக்கள், பட்டணத்தை நோக்கி ஓடிவர மாட்டார்கள்!

"நகரங்களில் எப்படிப் பல வசதிகள் இருக்கின்றனவோ அவற்றையெல்லாம் கிராமங்களுக்கும் ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், உணவு நெருக்கடியைத் தீர்க்க முடியும்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், விழா ஒன்றில் உரையாற்றுகையில், நம்பிக்கையும் உறுதியும் தெரிவித்துப் பேசினார்கள்.

செங்கற்பட்டை அடுத்த பழைய சீவரத்திலிருந்து பாலாற்றைக் கடந்து மறுகரை செல்லவேண்டியவர்கள், ஆற்றைக் கடக்க வசதியின்றி இருந்தனர்; இதற்காக பழைய சீவரத்தையும்—திருமுக்கூடலையும் இணைக்கும் வகையில் ரூ. 7 இலட்சம் செலவில் ஒரு தாம்போதி (தரைப் பாலம்) கட்டப்பட்டு, அதன் திறப்பு விழா 13—10—67-ல் பழைய சீவரத்தில் நடைபெற்றது.

இவ்விழாவில், முதலமைச்சர் அண்ணா அவர்கள் கலந்து கொண்டு 3,300 அடி நீளமுள்ள இந்தத் தரைப்பாலத்தைத் திறந்து வைத்தார்.

இவ்விழாவில், நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிட்டிபாபு, செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. செயலாளரும் தமிழகச் சட்டமன்ற உறுப்பினருமான சி. வி. எம். அண்ணாமலை, மற்றும் தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்களான செ. கோ. விசுவநாதன், கொளத்தூர் கோதண்டம், கே. எம். இராசகோபால், மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

பொறியர் விளக்கம்

முதலில், தாம்போதியைப் பற்றி தமிழக நெடுஞ்சாலை கிராமப் பொறியியல் பணித்துறை தலைமைப் பொறியாளர் உ. சிவசங்கரன் பி.ஈ. தெரிவித்ததாவது :—

"இந்தத் தாம்போதியைக் கட்டி முடித்ததால், வாலாஜாபாத்திலிருந்து மதுராந்தகம் செல்ல ஒரு குறுக்கு வழியும் ஏற்பட்டு, உழைப்பின் பயனான விளைபொருட்களைக் கொண்டு செல்லவும் இது பயன்படும்; இது 24 அடி அகலமுள்ள இரு வழிப் பாதையாகவும் பயன்படும்.

பாலாற்றின் தரை மட்டத்தில் கட்டப்பட்ட இது 3,300 அடி நீளமுள்ளது. 20 மாதங்களில் கட்டி முடிக்கப்பட்டது."

முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேசியதாவது :—

"இப்பாலம் அமைக்கப்பட்டதால் இந்தப் பகுதியிலுள்ள மக்கள் அக்கரைப் பகுதிக்கும், அக்கரைப் பகுதி மக்கள் இக்கரைப் பகுதிக்கும் சுலபமாகப் போக வர உதவும் என்று அவர்கள் எதிர்பார்த்தது—நெடுங்காலமாக எதிர்நோக்கியது இன்று கிடைக்கப்பெற்றது.

இதுவரையில் ஆற்றைக் கடக்கத் தொல்லைப்பட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு ஆறுதல் - மகிழ்ச்சி கிடைத்தது.

ரூ. 7 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது; மிகவும் நேர்த்தியான முறையில் கட்டியதற்காக இத்துறையைச் சேர்ந்த அதிகாரிகளைப் பாராட்டுகிறேன்.

இது, இங்குள்ள கிராம மக்களுக்கு ஏற்பட்ட புது வசதி மட்டுமல்ல—புதிய வாழ்வு பெற அளிக்கப்பட்டது.

உழைப்பால் பெற்ற விளைபொருள்களைத் தக்க நேரத்தில் சந்தைக்குக் கொண்டுவர இந்தப் பாதை வசதி அவசியம்.

இன்னும் பல கிராமங்களில் சாலை வசதி இல்லை. இந்தத் தரைப் பாலம் இங்கு அமைக்கப்பட்டதைப்போல் மற்ற கிராமங்களுக்கும் அமைத்துத் தரவேண்டும்.

இந்நாடு வாழவேண்டும் என்றால், கிராம மக்கள் வசதிகளைப் பெற்று வாழ வழி அமைத்துத் தரவேண்டும்.

சென்னையில் 22 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். சென்னை மாநகரத்துக்காகக் குடிதண்ணீர் வசதி, சுகாதார வசதி செய்யப்பட்ட போது, அங்கு, 5 இலட்சத்திலிருந்து 10 இலட்சம்வரை வாழ்வார்கள் என்ற கணக்கோடு போடப்பட்டது; ஆனால், தற்போது அளவுக்கு அதிகமாக 22 இலட்சம் பேர் வாழ்வதால், சுகாதார வசதியும், குடிதண்ணீர் வசதியும் திட்டமிட்டபடி போதுமானதோடு இல்லாமல் போகிறது.

இந்த 22 இலட்சம்பேரில் 10 இலட்சம் மக்கள் கிராமத்திலிருந்து நகரத்திற்குக் குடியேறியவர்கள்.

கிராம மக்கள், நகரத்தில் ஏன் குடியேறினார்கள் என்றால், கிராமத்தில் போதுமான வசதிகள் இல்லை; குடிநீர் வசதி, பள்ளிக்கூடம் இல்லை: ஆதலால்தான், கிராம மக்கள் இலட்சக்கணக்கில் வசதி பெற்ற நகரங்களுக்கு வந்துவிட்டார்கள்!

அப்படி நகரங்களுக்கு வந்த மக்கள் திரும்பிக் கிராமத்திற்கு வரவேண்டிய நிலை—கட்டம் வேகமாக வருகிறது!

விவசாயத் தொழிலில் தமிழக அரசு தீவிரமாக ஈடுபடுகிறது! கரம்பாக இருந்தவைகளை கழனியாக மாற்ற—ஒரு போகம் விளைந்த இடங்களை இரு போகம் விளையக் கூடியவையாக மாற்றவும் பழைய விதைகளை விட்டு — புதிய ரக விதைகளைப் போடவும்—தேவையான எரு கொடுக்கவும்—நீர்ப்பாசன வசதியையும் தமிழக அரசு அதிகமாகத் தருகிறது!

கிராமம் முன்னேறி அதை ஒளியேற்ற எண்ணி — அவை நடந்து — வேகமாக மாறிவருவதால், இன்று நகரத்தில் உள்ள மக்கள் கிராமத்திற்கு வந்து விவசாயத் தொழில் புரியவேண்டும்!

விவசாயத்திலும் விஞ்ஞான முறையில் பயிரிடப் படித்தவர்களும்—'படித்தோம்; படித்தவர் நாம்—பாடுபடக்கூடாது' என்ற பழைய எண்ணத்தை மாற்றிவிட்டதால் - மாறி வருவதால், நம்பிக்கையோடு இன்று கிராமத்திற்குத் திரும்பி வரவேண்டியவர்களாக இருக்கிறார்கள்!

யார் நகரத்திற்கு ஓடிவருகிறார்கள் என்றால், 20 முதல் 25 வயதுவரை உள்ள இளைஞர்கள்தான்!

படித்தவர்கள் — விவசாயத்தில் தேர்ச்சி பெற்றவர்கள்—இளைஞர்கள்தான் போய்விட்டார்கள்! 50 வயதைத் தாண்டிய வயோதிகர்கள்தான் இன்று அதிகமாகக் கிராமங்களில் இருக்கிறார்கள்!

விவசாயம் செழிப்படையாததற்கு இதுவும் ஒரு காரணம் எனலாம்!

வயோதிகர்கள் அனுபவம் மிக்கவர்கள்தான்; ஆனால், உழைக்கக்

(3-ம் பத்தி பார்க்க)

நடக்க இருப்பவை - பொதுக்கூட்டங்கள்

21--10--67

சென்னை 27-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு திருப்பள்ளி தெருவில்; தலைவர் : அ. சு. மணி; பேசுவோர்: அமைச்சர் சத்தியவாணி முத்து, எஸ். இராகவானந்தம், கோ. விசுவநாதம், எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., வி. முனுசாமி எம்.சி., எம்.ஆர்.சந்திரன், அரு. சங்கரபாணி.

22--10--67

சென்னை 9-வது வட்டம்

குடிசை வாழ்வோர் சங்கச் சார்பில் இரவு 7-மணிக்கு பழைய ஆட்டுத்தொட்டி சாலையில் (ஸ்டான்லி மருத்துவமனை எதிரில்) ; தலைவர் : எம். எஸ். தியாகராசன் ; பேசுவோர் : கி. மனோகரன் எம்.ஏ., எம்.பி., பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ., மு. வேதாசலம் எம்.எல்.ஏ., எஸ். கிருட்டினமூர்த்தி எம்.சி., டாக்டர் அபிபுல்லா பேக் எம்.எல்.ஏ., டி. வெங்கடேசன் எம்.சி., ந. இராமதாசு, ஏ. டிக்ரூஸ்.

சென்னை 84-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு கோபதி நாராயண சாமி செட்டி தெருவில் ; தலைவர்: சாலிகு ; பேசுவோர் : அமைச்சர் கே. ஏ. மதியழகன், ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., கே. கோவிந்தசாமி.

சென்னை 89-வது வட்டம்

எம். ஜி. ஆர். மன்றச் சார்பில் இரவு 7-மணிக்கு மந்தவெளிப் பாக்கம் 7-வது கிராஸ் தெருவில் ; தலைவர் : என். ஜம்பு ; பேசுவோர் : ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., இராம. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., முரசொலி மாறன், டி. கே. கபாலி, எஸ். வி. வேலு, ஜி. முனுசாமி, என். மதுரை பாண்டியன், சி. கே. எஸ். மணி.

அம்பத்தூர்

கோ. சு. மணி நினைவுமன்றச் சார்பில் கலைவாணர் என். எஸ். கே. இலவச இரவுப் பள்ளித் துவக்கவிழா ; காலை 8-மணிக்கு காமராசபுரத்தில்; தலைவர் : இரா. செகநாதன் ; பேசுவோர் : அ. பொ. அரசு எம்.எல்.ஏ., எம். கோபால் எம்.எல்.ஏ., அ. பொ. கன்னையன், தி. ந. மதிவாணன், இரா. மதியரசு, எ. அன்பானந்தன், சி. இராதாமணியன் (சி. வி. இராமலிங்கம் உணவு வழங்குவார்)

நெல்லை

எம்.ஜி.ஆர். மன்ற முதலாவது ஆண்டுவிழா ; இரவு 7-மணிக்கு கூழக் கடைத் தெருவில் ; தலைவர் : மா.சுப்பையா ; பேசுவோர்: எஸ். இரத்தினவேல்பாண்டியன் பி.ஏ.பி.எல்., அழகியநம்பி பி.ஏ. பி.எல்., எம் ஏ. மஜீத், ஏ. எல். சுப்பிரமணியம் எம்.எல.ஏ., எட்மண்ட் எம்.எல்.ஏ., இ. நம்பி, ச. வீரபாகு, மற்றும் பலர்.

கோவை 7-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 7 மணிக்கு கடலைக்கார சந்தில் ; தலைவர்: ப. மணி ; பேசுவோர் : இளஞ்செழியன்; எஸ். ஏ. இராசமாணிக்கம், கேரள சுந்தரம், க. மருதாசலம், க. அழகரசு, டி. டி. வேலு, ஏ. ஆர். சந்திரன்.

பெங்களூர்

தி. மு. க. சார்பில் மாலை 4 மணிக்கு சிக்லால்பாக் (சிட்டி இரயில்வே நிலையம் எதிரில்); தலைவர் : எம். நரசிம்மன்; பேசுவோர் : ப. உ. சண்முகம், தி. திராவிடமணி, எஸ். வி. பதி, கு. அ. சிவலிங்கம், ந. வெங்கடேசன், வே. மகிழரசன், எஸ். என். நாராயணன், வி. எம் சந்திரசேகரன், அம்மையம்மாள்.

திண்டுக்கல்

சவுந்தரபாண்டியனார் நினைவு மன்றச் சார்பில் மாலை 6-மணிக்கு பெரிய கடை வீதியில்; பேசுவோர்: முனியாண்டி எம்.எல்.ஏ. மு. இயலரசன், மா. தங்கவேலர்.

குழுக் கூட்டங்கள்

வேலூர் வட்ட தி. மு. க. பொது உறுப்பினர் கூட்டம், 22—10—67 பகல் 1-மணிக்கு கு. ஆனந்தன் தலைமையில் நடைபெறும்.

கள்ளக்குறிச்சி வட்ட தி. மு. க பொது உறுப்பினர் கூட்டம், 22—10—67 மாலை 2-மணிக்கு கள்ளக்குறிச்சி பார்ப்பனர் தெரு, 33 எண்ணுள்ள இல்லத்தில், எம். முத்தையன் தலைமையில் நடைபெறும்.

பூங்கா நகர்ப் பகுதி தோழர்களுக்கு :

"தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தலில் கழகச் சார்பில் வேட்பாளராகப் போட்டியிடும் முரசொலி மாறன் எம்.ஏ. அவர்களை ஆதரித்து 22-10-67 காலை 9-மணியளவில் பூங்கா நகர்ப் பகுதி தி. மு. க. சார்பில், கண்ணப்பர் திடலிலிருந்து மாபெரும் தேர்தல் பிரச்சார சைக்கிள் ஊர்வலம் தென் சென்னையை நோக்கிப் புறப்பட்டு, நாள் முழுவதும் தேர்தல் பிரசாரப் பணியில் ஈடுபடும். கழகத் தோழர்கள் — பகுதிப் பிரதிநிதிகள் மாவட்டப் பிரதிநிதிகள், பூங்கா நகர்ப் பகுதி மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், துணை மன்றங்கள், மற்றும் கழக ஆதரவாளர்கள்—இணைப்புக் கட்சித் தோழர்கள்—வட்டவாரியாக—சைக்கிள்களுடன் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்"

என்று பகுதிச் செயலாளர் டபிள்யூ. பி. பி. சுந்தரன் அறிவிக்கிறார்.

மதுரை மாவட்ட தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம்

22—10—67 ஞாயிறு காலை 10-மணியளவில், மதுரை மாவட்ட தி. மு. க. அலுவலகத்தில் (66, மேலக்கோபுரத் தெரு) மாவட்டப் பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும் ; உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டுகிறேன் ; ஆய்வுக்கு வரும் பொருள் : 'தலைமைக் கழக நிதி'

என்று மாவட்டச் செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி. அறிவிக்கிறார்.

'லாக்' நகரில் ஏற்பட்ட தீ விபத்து

பாதிக்கப்பட்டோருக்கு இரா. நெடுஞ்செழியன் என்.வி. நடராசன் ஆறுதல்

சென்னை, அக். 19—

சேப்பாக்கம் கூவம் நதிக்கரைக்கு அருகிலுள்ள லாக் நகர் பகுதியில் இன்று அதிகாலை 3-30 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் குடிசைகள் எரிந்து சாம்பலாயின. உயிர்ச் சேதமில்லை என்றாலும், தட்டுமுட்டு சாமான்கள் அனைத்தும் எரிந்துவிட்டன.

செய்தி அறிந்த அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் ஆகியோர் தீ விபத்து நடந்த இடத்திற்குச் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறினர்.

தீ விபத்தால் 100 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாநகராட்சி அதிகாரிகள் நிவாரண நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

கல்வி அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன் சுற்றுப்பயணம்

அக். 21 : காலை 8 மணி : வடகரை—பள்ளிக் கட்டிடத் திறப்பும், ஊராட்சி வரவேற்பும் ; 10-30 மணி: திருவாரூர்—இந்து சமய-அறநிலையத் துறை ஆலோசனைக் குழுக் கூட்டம் ; மாலை 3 மணி : திருவாரூர்—இந்து சமய - அறநிலைய அதிகாரிகள் கூட்டத்தில் தலைமைதாங்கல் ; 5 மணி : மன்னை—பள்ளிக் கட்டிடத் திறப்பு ; 6-30 மணி : கொரடாச்சேரி—பள்ளிக் கட்டிடத் திறப்பு ; இரவு 7-30 மணி : உயர்நிலைப் பள்ளிக் கட்டிடத் திறப்பு ; 8-30 மணி : பொதுக் கூட்டம்.

செப். 22 : காலை 8-30 மணி : திருவாரூர்—புதிய நெல் அறவை நிலையம் பார்வையிடல் ; 10-30 மணி : இந்து சமய - அறநிலைய நிர்வாக அதிகாரிகள் மாநாட்டில் தலைமைதாங்கல் ; பிற்பகல் 2-30 மணி : ஆசிரியர் சங்க வரவேற்பு ; மாலை 4 மணி : திருவாரூர் — பெண்கள் உயர்நிலைப் பள்ளி வரவேற்பு ; 5 மணி : குழிக்கரை — பொதுக்கூட்டம் ; 6 மணி : அம்மையப்பன்—பள்ளிக் கட்டிடத் திறப்பும், ஊராட்சி வரவேற்பும் ; இரவு 7-30 மணி : கும்பகோணம்—ஆசிரியர் சங்க வரவேற்பு; 8-30 மணி: பொதுக் கூட்டம்.

தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கும் நகர ஈட்டுப் படி

தூதுக் குழுவினருக்கு அண்ணா தந்த உறுதி

சென்னை, அக். 20—

"அரசினர் உதவிபெறும் பள்ளிக்கூடங்களில் பணியாற்றும் ஆசிரியர்களின் சார்பான தூதுக் குழுவினர் என்னைச் சந்தித்தனர் ; அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படுவது போலவே தங்களுக்கும் நகர ஈட்டுப் படி வழங்கிட வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

"இந்த ஆண்டில் எஞ்சியுள்ள மூன்று மாதங்களுக்கு இந்தவகையில் ரூ. 2-இலட்சம் மட்டுமே செலவாகுமென்றும், அடுத்த ஆண்டு முழுவதற்கும் ரூ. 7—இலட்சம் செலவாகுமென்றும் தூதுக் குழுவினர் என்னிடம் தெரிவித்தனர்.

"இந்தப் பிரச்சினை குறித்து நிதித்துறை அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து அரசின் முடிவை அறிவிப்பதாக தூதுக் குழுவினரிடம் உறுதி அளித்துள்ளேன்"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்துள்ளார்கள்.

தூதுக் குழு சந்திப்பு

தமிழக மேலவை உறுப்பினர் திரு. அறிவழகன் எம்.ஏ. தலைமையில் சென்ற தூதுக்குழுவில், தென்னிந்திய ஆசிரியர்கள் சங்கம்—நகரத் தலைமை ஆசிரியர்கள் [illegible]கம்—துவக்கப் பள்ளி [illegible]கள் கூட்டணி—புலவர் மன்றம் ஆகியவற்றைச் சேர்ந்த பிரதிநிதிகள் இடம் பெற்றிருந்தனர்.

முதலமைச்சர் அண்ணா அவர்களை 19—10—67 காலை 10-மணியளவுல்—அவருடைய இல்லத்தில் தூதுக் குழுவினர் சந்தித்தனர்.

தமிழக அமைச்சரவை ஆசிரியர்கட்குக் கிராக்கிப் படி உயர்வு அளித்தது—இன்ன பிற நல்ல நடவடிக்கைகளை எடுத்தது—ஆகியவற்றிற்குத் தங்கள் ஆதரவையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டதுடன், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு நகர ஈட்டுப் படி தரவேண்டியதன் அவசியத்தையும் தெரிவித்துக் கொண்டனர்.

மேலும், வீட்டு வாடகைப் படி தரவேண்டிய நிலை குறித்தும், சுகாதார அமைச்சர் முன்பு அறிவித்ததற்கு இணங்க மருத்துவ உதவியை விரைவில் அமுல்படுத்த வேண்டியது பற்றியும் குழுவினர் விளக்கினர்.

குழுவினர் எடுத்துரைத்தவற்றை மாண்புமிகு முதல்வர் அண்ணா அவர்கள் பொறுமையாகக் கேட்டுக் குழுவினர் கூறியவற்றைத் தாம் அறிந்துகொண்டதாக கூறுதி கூறினார்.

கல்வியமைச்சருடன் சந்திப்பு

மேலும் குழுவினர், மாண்புமிகு கல்வி அமைச்சரையும் கண்டு, பிரச்சினைகளை எடுத்துரைத்தனர்.

அவர்கள் கூறியவற்றை அனுதாபத்துடன் கவனிப்பதாகவும், நிதி நிலவரம் பற்றி முதல் அமைச்சருடன் கலந்து ஆலோசிப்பதாகவும் கல்வி அமைச்சர் கூறினார்.

சென்னைச் சீரணியினர் சுறுசு[illegible]ப்பு

கால்வாய் வெட்டும் பணி தீவி[illegible]ாகிறது

'விரைவில் முடித்துத் தருகிறோம்' எனச் சூளுரை

சென்னை, அக். 20—

பெரம்பூர் பகுதியில், சென்னைச் சீரணியினர் கால்வாய் வெட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

சென்னை 32-வது வட்டம் வியாசர்பாடி—கல்யாணபுரம் பகுதியில், நேற்றுமுதல் விறுவிறுப்பு ஏற்பட்டுள்ளது ; காரணம், அறிஞர் அண்ணா அவர்கள் 18—10—67 அன்று, கால்வாய் வெட்டும் வேலையைப் பார்வையிட்டு, சீரணியில் ஈடுபட்டுள்ள தோழர்களையும், தாய்மார்களையும் பாராட்டியது.

தற்போது அங்குள்ள பொது மக்கள்—ஆண்களும் பெணகளும்—தங்களைப் பணியில் ஈடுபடுத்திக் கொண்டு, 'இன்னும் மூன்று நாட்களுக்குள் வேலையை முடித்துத் தருகிறோம்' எனச் சூளுரை எடுத்துக்கொண்டனர். அதற்காகத் தோழர்கள் எஸ். பாலன், சு. சிங்காரம், செல்லக்குட்டி, பார்த்திராஜ், எம். மாரி ஆகியோரும், தாய்மார்களில் சரசுவதி—தணிகாசலம், ஜெயா, பொன்னம்மாள் ஆகியோரும் முனைந்து பணியாற்றுகின்றனர்.

இரவு நேரத்தில் அதிகமான தோழர்கள் ஈடுபடுகின்றனர்.

ஜெகஜீவன்ராம் நகரைச் சேர்ந்த எம். ஏகாம்பரம் என்பவர், நேற்று சீரணியினருக்குப் பகலுணவும், மாலையில் கேழ்வரகு வழங்கினார்.

தொகுதித் தலைவர்களான டில்லிராஜ், மணிவண்ணன், வெங்கடேசன் எம்.சி. ஆகியோரும், வட்ட நகராட்சி உறுப்பினர் அன்பிற்கரசனும், உடனிருந்து பணியாற்றுகின்றனர்.

"27—10—67 அன்று தியாகராயர் கல்லூரி மாணவர்கள் கால்வாய் வெட்டும் வேலையில் ஈடுபடுவர்"

என்று, வட சென்னை சீரணி செயலாளர் சு. பாலன் எம்.சி. அறிவிக்கிறார்.

தேர்தல் பிரசார ஊர்வலங்கள்

சென்னை 92-வது வட்ட தி.மு.க. சார்பில் தேர்தல் பிரசார ஊர்வலம் 22—10—67 காலை 8-மணிக்கு வட பழனி எம். ஜி. ஆர். திடலிலிருந்து சா. கணேசன் எம்.சி. தலைமையில் புறப்படும்; வேட்பாளர் முரசொலி மாறன் துவக்கிவைப்பார்.

நேஷனல் கார்பன் கம்பெனி தி.மு.க. தொழிலாளர் ஊர்வலம்

நேஷ[illegible]ம்பெனி தி. மு. [illegible] பில் [illegible] அவர்களை [illegible]த்து, 22—10—67 காலை 8-மணிக்கு தண்டையார்பேட்டை பேருந்து நிலையம் அருகிலிருந்து சைக்கிள் ஊர்வலம் புறப்படும்.

நெல்லை மாவட்ட தி. மு. க. உறுப்பினர் கூட்டம்

"நெல்லை மாவட்ட தி. மு. க. உறுப்பினர்கள் கூட்டம், 22—10—67 காலை 10 மணிக்கு குற்றாலம் ஸ்கார்பியன் பங்களாவில் நடைபெறும்"

என்று மாவட்டச் செயலாளர் எம். எஸ். சிவசாமி அறிவிக்கிறார்.

சென்னைக்குக் காவிரி குடிநீர்த் திட்டம்

முதலமைச்சர் அண்ணா துவக்கிவைப்பார் — அமைச்சர் மு. கருணாநிதி தலைமைதாங்குகிறார்

மேயரும் அமைச்சர்களும் பங்கேற்கும் சிறப்புமிக்க விழா

சென்னை, அக். 20—

தமிழகச் சட்டமன்றத்தில் வரவு - செலவுத் திட்ட அறிக்கையின்போது, முதலமைச்சர் அறிவித்தவாறு வீராணம் ஏரியிலிருந்து காவிரி நீரைச் சென்னைக்குக் கொண்டுவரும் திட்டத்தின் முதற்கட்ட வேலைக்கான தொடக்க விழா அக். 30-ந் தேதி மாலை [illegible]பேட்டையில் நடைபெறுகிறது.

[illegible]ல் தூரம் வீராணம் ஏரியிலிருந்து சென்னைக் [illegible]லம் காவிரி நீரைக் கொண்டுவரும் இத்திட்டத் [illegible]காடி வரையில் செலவிடத் தமிழக அரசு திட்ட மிட்[illegible]

செ[illegible]க்களின் நீண்ட நா[illegible] ப[illegible]வலை நிறைவு செய்யு[illegible]த மாபெரும் திட்டத்திற்[illegible] தொடக்க விழா[illegible] முதலமைச்சர் அண்ண[illegible] அவர்கள் நடத்துகிறார்க[illegible]

பொதுப்[illegible]ரி அமைச்சர் மு. கரு[illegible]நிதி தலைமையில் விழா நடைபெறும்.

சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா, உள்ளாட்சித் துறை அமைச்சர் முத்துசாமி ஆகியோர் கலந்துகொள்ளும் இவ் விழாவில், மேயர் இரா. சம்பந்தம், வரவேற்புரை நிகழ்த்துவார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அமுதம் அச்சகத்தில் (24, [illegible] செங்குந் தெரு, சென்னை [illegible]) [illegible]